தினத் தந்தி
DAILY THANTHI
நகரம்

# திருநங்கைகள், திருநம்பிகளுக்கு இலவச வேலைவாய்ப்பு திறன் பயிற்சி

## இன்று முதல் 3 நாட்கள் நடக்கிறது

சென்னை, செப்.7–

திருநங்கைகள், திருநம்பிகளுக்கான இலவச வேலைவாய்ப்பு திறன் பயிற்சி இன்று முதல் 3 நாட்கள் நடக்கிறது.

### திறன் மேம்பாட்டு பயிற்சி

சியர் தொண்டு நிறுவனம் மற்றும் எஸ்.பி.எஸ். இந்தியா பவுண்டேஷன் இணைந்து நடத்தும் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளுக்கான 3 நாள் இலவச வேலைவாய்ப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் இன்று முதல் 9–ந் தேதி வரை சென்னை கீழ்ப்பாக்கம், லேண்டன்ஸ் சாலையில் உள்ள டான் போஸ்கோ தொடர்பு கலை நிறுவனத்தில் நடைபெற உள்ளது.

இந்த வேலைவாய்ப்பு திறன் மேம்பாட்டு பயிற்சியில் பங்கு பெற கல்வித் தகுதி தேவையில்லை. சரியான வழிகாட்டுதல் இல்லாமல், தகுந்த வேலை வாய்ப்பை பெற முடியாமல் இருக்கும் திருநங்கைகளுக்கும், திருநம்பிகளுக்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

### உளவியல் ஆலோசனைகள்...

பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்களுக்கு தகவல் தொடர்பு பரிமாற்றம், படைப்பாற்றல், தன்னம்பிக்கை போன்ற திறன்கள் கற்றுக் கொடுக்கப்பட உள்ளது. மேலும் முகாமின் மூலம் திருநங்கைகள், திருநம்பிகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படுகிறது.

வேலைக்கு செல்லும் இடங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், சமுதாயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது போன்ற உளவியல் ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன், அவர்கள் விரும்பும் வகையிலான வேலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

### சான்றிதழ் வழங்கப்படுகிறது

முகாமில் கலந்துகொள்பவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், வேலை வாய்ப்பு வழங்கும் நிறுவனங்களிடம் திருநங்கைகள், திருநம்பிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சிகள் என்ன என்ன? அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பனவெல்லாம் தெளிவுபடுத்தி அவர்களுக்கு வேலை வழங்கப்படும்.

மேலும், உணவகம் போன்று தனியாக தொழில் தொடங்க விரும்புபவர்களுக்கு அதற்கு தகுந்த பயிற்சிகளும், உதவிகளும் செய்து கொடுக்கப்படும்.

மேற்கண்ட தகவல்கள் சியர் நிறுவனத்தின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.